கடவுள் துணை.

# யாப்பிலக்கணச்சுருக்கம்.

இஃது

திரிசிரபுரம்

ஸேன்ற் ஜோஸப் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

முத்திச்சிதம்பரம் பிள்ளையால்

இயற்றப்பட்டது.

MADRAS-1

TRICHINOPOLY:

PRINTED AT "ST. JOSEPH'S COLLEGE PRESS".

1898.

# முகவுரை.

யாப்பிலக்கணச்சுருக்கமென்னும் இச்சிறு நூல் காலேஜ்களிலும் ஹைஸ்கூல்களிலும் படிக்குமாணாக்கர்களுக்கும் தமிழின் விருப்பமுடைய வேனையோர்க்கும் பயன்படுமாறு மென்மையான மொழிநடையாலே எழுதப்பட்டுள்ளது. ஆதலால் மாணாக்கர் இதனை நன்மையான புத்தியுடனுணர்ந்து கற்றுப் பெருநூலாலடையும் பயனைப்பெறுவர்.

வம்பர் மீ
898 வரு.

முத்துச்சிதம்பரம் பிள்ளை.

# கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
# மகா-ா-ா-ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள் அன்புடனெழுதிய
# கடிதம்.

---

ம-ா-ா-ஸ்ரீ முத்துச்சிதம்பரம் பிள்ளையவர்களெழுதிய யாப்பிலக்கணச் சுருக்கத்தை முற்றும் பார்த்தேன். அது, யாப்பருங்கலக்காரிகையின் கருத்தைத் தழுவி ஒழுங்காகவும் மிகத்தெளிவாகவும் வேண்டிய பல விஷயங்களை அடக்கியும் நன்றாக எழுதப்பட்டிருத்தலால், வித்தியாசாலைகளிற் படிக்கும் மாணாக்கர்கள் யாப்பிலக்கணத்தை எளிதிற்றெரிந்து கொள்ளுதற்குச் சிறந்த கருவியாகவுள்ளதென்று அறிஞர்கள் பலரும் அங்கீகரிப்பார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,<br>
கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்,<br>
29-9-98. வே. சாமிநாதையன்.

# யாப்பிலக்கணச்சுருக்கம்.

1. தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்துவகையாம்.

2. அவற்றுள் யாப்பாவது பலசொற்கள் தொடர்ந்து நின்று ஓர்பொருள் பெறச்செய்வதோர் செய்கை. செய்யுள் என்பதும் அதுவே. இவ்விலக்கணம் உறுப்பியல், செய்யுளியல் என இரணடு வகையினையுடையது.

3. உறுப்பியலாவது, எழுத்து, அசை, முதலிய செய்யுளின் உறுப்புக்களைக்கூறுவதாம்.

4. செய்யுளியலாவது, பாவும், பாவினமுமாகிய செய்யுட்களின் இலக்கணத்தைக்கூறுவதாம்.

---

## உறுப்பியல்.

5. செய்யுளுக்கு உறுப்பாவன, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, என்னும் ஆறுமாம்.

### எழுத்து.

6. செய்யுளுக்கு உறுப்பாகுமெழுத்துக்கள் நன்னூலிற் கூறியபடி முதலும் சார்புமாகிய முந்நூற்றுத்தொண்ணூற்றொன்பதுமாம்.

### அசை.

7. இவ்வெழுத்துக்கள் தனித்தாவது இரண்டு முதலியவாகச் சேர்ந்தாவது அசைந்து ஒருவித இசையைக்கொண்டு வருவதே அசையாம்.

8. அவ்வசை நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

9. **நேரசையாவது,**—குறிலாவது, நெடிலாவது தனித்தேனும் ஒற்றடுத்தேனும் வருவதாம்.

(உ-ம்) பாடு கண்டான். இதில் **பா** என்பது நெடில் தனித்து வந்த நேரசை, **டு**, குறில் தனித்து வந்த நேரசை, **கண்**, குறில் ஒற்றடுத்து வந்த நேரசை, **டான்** நெடில் ஒற்றடுத்து வந்த நேரசை.

10. **நிரையசையாவது,** இரு குறில் இணைந்தாவது குறில் நெடிலோடாவது சேர்ந்து தனித்தேனும் ஒற்றடுத்தேனும் வருவதாம்.

(உ-ம்) மணிவரா எடுத்தடான். இதில் **மணி,** என்பது குறிலோடு குறில் சேர்ந்து தனித்து வந்த நிரையசை, **வரா** என்பது குறில் நெடிலோடு சேர்ந்து தனித்து வந்த நிரையசை, **எடுத்,** என்பது குறிலோடு குறில் சேர்ந்து ஒற்றடுத்து வந்த நிரையசை, **தடான்** என்பது குறில், நெடிலோடு சேர்ந்து ஒற்றடுத்து வந்த நிரையசை.

## சீர்.

11. இவ்வசைகள் தனித்தேனும் இரண்டு முதலியவாகச் சேர்ந்தேனும் சீர்பெற வருவது **சீராம்.**

12. அச்சீர், ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நான்கு வகைப்படும்.

13. நேரசையாவது நிரையசையாவது தனித்து நின்று சீராய் வருவதால் ஓரசைச்சீர் இரண்டாம்.

(உ-ம்) இறைவனடி சேரா தார். இதில் **தார்** என்பது நேரசை, தனியே வந்த ஓரசைச்சீர்.

குலத்தளவே யாகுங் குணம். இதில் **குணம்** என்பது நிரையசை, தனியே வந்த ஓரசைச்சீராம்.

14. மேற்கூறிய அசைகளிரண்டும் தனித்தேனும் பிறிதோடும் சேர்ந்து வருதலால் ஈரசைச்சீர் நான்காம். அவை **இயற்சீர், அகவற்சீர், ஆசிரியவுரிச்சீர்** எனப்பெயர் பெறும்.

அவற்றுள் நேர் இறுதியாகிய இரண்டும் மாச்சீர் எனவும், நிரையிறுதியாகிய இரண்டும் விளச்சீரெனவும் பெயர் பெறும்.

(அவை வருமாறு)

| | | |
|---|---|---|
| நேர் | நேர் | தேமா |
| நிரை | நேர் | புளிமா |
| நிரை | நிரை | கருவிளம் |
| நேர் | நிரை | கூவிளம் |

15. மேற்கூறிய ஈரசைச்சீர் நான்கனோடும், நேரசையும், நிரையசையும் தனித்தனியே சேர்ந்து வருதலால், மூவசைச்சீர் எட்டாம்.

அவற்றுள் நேர் இறுதியாகிய நான்கும், வெண்சீர், வெண்பாவுரிச்சீர், காய்ச்சீர் எனப்பெயர் பெறும்.

நிரையிறுதியாகிய நான்கும் வஞ்சிச்சீர், வஞ்சியுரிச்சீர், கனிச்சீர் எனப்பெயர் பெறும்.

உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| நேர் | நேர் | நேர் | தேமாங்காய். |
| நிரை | நேர் | நேர் | புளிமாங்காய். |
| நிரை | நிரை | நேர் | கருவிளங்காய். |
| நேர் | நிரை | நேர் | கூவிளங்காய். |
| நேர் | நேர் | நிரை | தேமாங்கனி. |
| நிரை | நேர் | நிரை | புளிமாங்கனி. |
| நிரை | நிரை | நிரை | கருவிளங்கனி. |
| நேர் | நிரை | நிரை | கூவிளங்கனி. |

16. மேற்கூறிய மூவசைச்சீர் எட்டனோடும் நேரசையும் நிரையசையும் தனித்தனியே சேர்ந்து வருதலால் நாலசைச்சீர் பதினாறாம். அவை பொதுச்சீர் எனவும் பெயர் பெறும்.

ஈரசைச்சீருடன் தண்பூ, நறும்பூ, தண்ணிழல், நறுநிழல் என்னும் இவற்றைக் கூட்டப்பதினாறும் வரும்.

தளை.

17. மேற்கூறிய சீர்களுள் இரண்டு சேர்ந்து நிற்பதே தளையாம்.

அவை முதற்சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும ஒன்றியேனும விகற்பித்தேனும் வரும்.

18. அத்தளைகள் நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர்வெண்டளை, வெண்சீர்வெண்டளை, கலித்தளை, ஒன்றியவஞ்சித்தளை, ஒன்றாதவஞ்சித்தளை என ஏழாம.

19. ஆசிரியவுரிச்சீர் பின்வரும சீரோடு நேராய ஒன்றிவருவது நேரொன்றாசிரியத்தளையாம்.

(உ-ம்) கொன்றை வேந்தன்.

20. ஆசிரியவுரிச்சீர பின்வரும சீரோடு நிரையாய ஒன்றி வருவது நிரையொன்றாசிரியத்தளையாம.

(உ-ம) பூமலி யசோகின்.

21. ஆசிரியவுரிச்சீரானது பின்வரும சீரொடு ஒன்றாது வருவது இயற்சீர வெண்டளையாம. அது மா முன் நிரையும், விள முன் நேருமாய வரும.

(உ-ம்) கற்க கசடற.
மலர் மிசை யேகினான்.

22. வெணசீரானது பின் வரும சீரொடு ஒனறிவருவது வெணசீர வெணடளையாம. அதாவது காய முன் நோ வருவதாம.

(உ-ம்) எண்குணத்தான் றாளை.

23. வெணசீரானது பின்வரும் சீரொடு ஒன்றாதுவரிற் கலித்தளையாம.

(உ-ம்) முல்லைத்தார் மறமன்னர்.

24. வஞ்சியுரிச்சீரானது பின்வரும சீரொடு ஒன்றிவருவது ஒன்றிய வஞ்சித்தளையாம.

(உ-ம்) விளைக்கம்பலை மனைச்சிலம்பவும் (ஒன்றியவஞ்சித்தளை.)

25. அசைச்சீர் ஒன்றாதுவரின் ஒன்றாதவஞ்சித்தளையாம்.
(உ-ம்) மகதாநிலம் வந்தசைப்ப (ஒன்றாத வஞ்சித்தளை.)

## அடி.

26. மேற்கூறியசீர்கள் இரண்டு முதலியவாக அடுத்து வருவது **அடியாம்**. அது **குறளடி, சிந்தடி, அளவடி** அல்லது **நேரடி, நெடிலடி, கழிநெடிலடி** என ஐந்து வகையாம்.

27. இருசீரால் வரும் அடி **குறளடியாம்.**

(உ-ம்) திரைத்த சாலிகை
நிரைத்த போனிரைந்
திரைப்ப தேன்களே
விரைக்கொண் மாலையாய்.

28. மூன்று சீரால் வரும் அடி **சிந்தடியாம்.**

(உ-ம்) இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக்கத்திலோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடக்கையினாய்.

29. நாற்சீரால் வருமடி **அளவடி** அல்லது **நேரடியாம்.**

(உ-ம்) துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க

30. ஐந்து சீரால் வருமடி **நெடிலடியாம்.**

(உ-ம்) வென்றான் வினையின் தொகையாய விரிந்து தன்கண்.

31. ஆறு முதலிய பலசீரால் வருமடி **கழிநெடிலடியாம்.**

(உ-ம்) சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற கோசலையைத்
தொழுது நோக்கி,

32. எழுசீரடி முதலானவற்றை யிலக்கியங்களிற் காண்க.

எண்சீரின் மிக்கவடி சிறப்பில.

## தொடை.

33. **தொடையாவது** சீர்களைப்பலவாறு தொடுத்தலாம் அது ஓரடியின் பலசீர்க்கண்ணும் பலவடியின் முதற்சீர்க்கண்ணும் வரும்.

34. அவை **மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை** என ஐந்து வகையாம்.

35. சீர்களில் முதலெழுத்து ஒன்றி வரத்தொடுப்பது மோனைத்தொடையாம்.

(உ-ம்) கற்க கசடறக்கற்பவை கற்றபின்.

36. சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றி வரத்தொடுப்பது இயைபாம்,

(உ-ம்) வில்லே, நுதலே வேற்கண் கயலே.

37. சீர்களின் முதலெழுத்து மாத்திரையில் ஒத்து நிற்க இரண்டாமெழுத்து ஒன்றிவரத்தொடுப்பது எதுகையாம்.

(உ-ம்) கன்னியம்புன்னை பின்னிழற்றுன்னிய.

38. சீர்களில் மறுதலையான மொழிகள் வரத்தொடுப்பது முரண்டொடையாம்.

(உ-ம்) துவர்வாய்த்தீஞ்சொலு முவந்தெனை முனியாது.

39. சீர்களில் அளபெடைகள் வரத்தொடுப்பது அளபெடைத்தொடையாம்.

(உ-ம்) மாஅத்தாஅண்மோஒட்டெருமை

40. இத்தொடைகள் ஒவ்வொன்றும் ஓர் அளவடியின் முதல் இரண்டு சீரின் வருவது இணை எனப்படும். இடையிட்டுவரிற் பொழிப்பாம். இருசீர் இடையிட்டுவரின் ஒரூஉவாம். ஈற்றுச்சீர் ஒழிந்த சீர்களில் வரிற் கூழையாம்.

முதற் சீரினயற் சீரொழிந்துவரின் மேற்கதுவாய். ஈற்றயற் சீரொழிந்துவரின் கீழ்க்கதுவாய். நான்கு சீரிலும் வரின் முற்றும்.

(உ-ம்) அணிமலரசோகின்றளிர் நலங்கவற்றி
அரிக்குரற்கிண்கிணியரற்றுஞ்சீரடி
அம்பொற்கொடிஞ்சி நெடுந்தேரகற்றி,
அகன்றவல்குலந்நுண்மருங்குல்
அரும்பிய கொங்கை யவ்வளையமைத்தோள்.

அவிர்மதியனைய திருநுதலரிவை
அயில்வேலனுக்கியம்பலத்தமர்ந்த
கருங்கயனெடுங்கணோக்கமென்
திருந்திய சிந்தையைத்திறை கொண்டனவே.

இதில் மோனைத்தொடையின் எழுவிதத்தையும் முறையே கண்டுகொள்க.

மற்றைத்தொடைகளின் வகையுமிவ்வாறே வருதல் இலக்கியங்களிற்காண்க,

41. ஒரு அடி, அல்லது செய்யுளின் அந்தமானது பின்வரும் அடி அல்லது செய்யுளுக்கு ஆதியாக வருவது அந்தாதித்தொடையாம்.

(உ-ம்.) உலகுடன் விளக்கு மொளிதிகழவிர்மதி
மதிநலனழிக்கும் வளங்கெழுமுக்குடை
இது அடியின்கண்வந்த அந்தாதிதொடை

செய்யுட்கண்வருவதை இலக்கியங்களிற் காண்க.

42. அடி முழுவதும் வந்தே சொல்லே வருவது இரட்டைத் தொடையாம்.

(உ-ம்.) ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவினிறம்.

43. முற்கூறிய தொடைகள் எல்லாம் இன்றிவருவது செந்தொடையாம்.

(உ-ம்) அறம் பொருளின்பமும் வீடும் பயக்கும்.

---

## செய்யுளியல்.

1. செய்யுளாவது அறிவுடையோரால் பல சொற்க ளால் பொருளுக்கிடமாக அழகுபெறச்செய்யப்பட்டதாம்.

2. அச்செய்யுள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ் சிப்பாவும் அவற்றிற்கு இனமாகிய தாழிசை, துறை, விருத் தங்களும், மருட்பாவுமாம்.

### வெண்பா.

3. மேலியலிற் கூறிய உறுப்புகளில், இயற்சீரையும், வெண்சீரையுமே உடையனவாய், அவற்றாலாகிய இயற்சீர் வெண்டளையையும் வெண்சீர் வெண்டளையையுமே பெற்று வேற்றுத்தளை விரவாமல் வருவன வெண்பாவாம்.

அவை ஈற்றடியொன்றும் சிந்தடியாய் ஏனைய அளவடி யாய் வரப்பெறும்.

ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஓரசைச் சீராய், நாள், மலர், போல வரும்; உகரம் பெற்று, காசு, பிறப்பு—என வருதலும் உண்டு.

இவ்வெண்பாவிற்கு ஓசை செப்பலோசையாம்.

4. இவை, குறள், சிந்தியல், நேரிசை, இன்னிசை, பஃ றொடை, என ஐந்து வகைப்படும்.

5. மேற்கூறிய பொதுவிலக்கணத்துடன் இரண்டு அடி யால் வரும் வெண்பாக் குறள்வெண்பா எனப்படும். அவ் விரண்டடியும் ஒரெதுகையாயிருத்தலும் வேறுபட்டிருத்த லுமுண்டு.

(உ-ம்) வானோக்கி வாழுமுலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங்குடி
உருவு கண்டெள்ளாமை வேண்டுமுருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னாருடைத்து.

6. மூன்றடியால் வரும் வெண்பா சிந்தியல் வெண்பா ாம். அது பின் சொல்லப்படும் நேரிசை வெண்பாவைப் பால முதலிரண்டடியும்வரின் நேரிசைச்சிந்தியல்வெண்பா வனவும் அதனின் வேறுபட்டுவரின் இன்னிசைச்சிந்தியல் வண்பா எனவும் பெயர்பெறும்.

(உ-ம்) நற்கொற்றவாயி னறுங்குவளைத்தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே—பொற்றேரான்
பாலை நல்வாயின் மகள்.

இது நேரிசைச்சிந்தியல் வெண்பா.

சுரையாழவம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

இது இன்னிசைச்சிந்தியல் வெண்பா.

7. இரண்டு குறளும நடுவே தனிச்சொல்லுமாகிய ன்கடியால்வரும் வெண்பா நேரிசைவெண்பா எனப்படும. இதில முன் குறளடியிரண்டும ஓர் எதுகையாயும் பின் ளடியிரண்டும் ஓா எதுகையாயுமிருத்தல் வேண்டும். ன்கடியும் ஒரே எதுகையாயுமிருக்கலாம்.
னிச்சொல் முதற்குறளின் எதுகைபெற்று வெண்டளை ழுயாது வரல் வேண்டும்.

(உ-ம்) தடமண்டு தாமரையின் றாதா டலவன்
இடமண்டிச் செல்வதனைக் கண்டு—பெடையொண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரேபொய்கடிந்
தூழி நடாயினா னூர்.

)தில் தனிச்சொல் ஒழிய மற்றவை இரண்டு குறளாயி கலால் இது இருகுறள் நேரிசைவெண்பா எனப்படும்.

கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—ஒருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்.

இதில் முதற்குறளின் ஈற்றசைச்சீருக்கும், தனிச்சொல் லுக்குமிடையில் யா என ஓர் அசையிருத்தலால், இது ஒராசிடை நேரிசைவெண்பா எனப்படும.

தாமரையின்ருதாடித் தண்டுவேலைச் சேறளைந்து
தாமரையி ரூற்றமே தாரூறும்— தாமரைபோற்
கண்ணன் முகத்தான் கரதலத்தான் சேவடியென்
கண்ணார்வஞ் செய்யுங்கருத்து.

இதில் முதற்குறளின் ஈற்றசைச்சீருக்கும் தனிச்சொல் லுக்குமிடையில், ரு, றம், என விரணடசை யிருத்தலால் இது ஈராசிடை நேரிசைவெண்பா எனப்படும.

8. நேரிசை வெண்பாவின் வேறுபட்டுத் தனிச்சொற் பெற்றும் பெருதும் நான்கடியால் வரும வெண்பா இன னிசைவெண்பாவாம்.

(உ-ம்) அங்கண் விசும்பினகனிலாப்பாரிக்குந்
திங்களுஞ் சான்ரேரு மொப்பர்மற்—றிங்கள்
மறுவாற்றுஞ் சான்ருே ரஃதாற்ருர் தெருமந்து
தேய்வரொருமா சுறின்.

இது இரணடாமடியினிறுதியிற்றனிச்சொற்பெற்றும், மூன்ருமடியும நான்காமடியும் ஓரெதுகையாயில்லாமை யால் இன்னிசை வெண்பாவாம்.

கொடுததலுந் துய்த்தலுந்தேற்ரு—விடுக்குமட
யுள்ளததான் பெற்ற பெருஞ்செல்வ—மில்லத்
துருவுடைக் கன்னியேபோலப்—பருவத்தா
லேதிலான் றுய்க்கப்படும்.

இஃது அடித்தோறுந் தனிச்சொற்பெற்றும் பல எதுகை யாய் வந்தமையால் இன்னிசை வெண்பாவாம்.

அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்துநோக்கிப்
புகத்தாம் பெருஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தாற் றவஞ்செய்யா தார்.

இது தனிச்சொலின்றி நான்கடியால் வந்த இன்னிசை வெண்பாவாம்.

9. ஐந்து முதல் பன்னிரண்டீறுகிய பலவடிகளால் வரும் வெண்பா பஃறொடை வெண்பா எனப்படும்.

(உ-ம்) சேற்றுக்காணீலஞ் செருவென்றவேந்தன்வேல்
கூற்றுறழ்பொய்ம்பிற் பகழிபொருகயற்
றேற்றந்தொழில் வடிவுதம்முட்டமொற்றம்
வேற்றுமையின்றியே யொத்தனமாவேடர்
ஆற்றுக்காலாட்டியர் கண்.

இது, ஐந்து அடியால் வந்த பஃறொடை வெண்பாவாம்.

பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவி
லென்னோ டிருவர் நின்றா ரவருள்ளும்,
பொன்னோடை நன்றென்றா ளல்லளே, பொன்னோ
கியானை நன் றென்றாளு மந்நிலையள், யானை [டைக்
யெருத்தத்திருந்த விலங்கிலை வேற்றென்னன்
றிருத்தாரை நன்றென்றேன் றியேன்.

இஃது ஆறடியால் வந்த பஃறொடை வெணபா.

ஏழடி முதலியவற்றால் வரும் பஃறொடை வெண்பாக் களை இலக்கியங்களிற் காண்க.

## குறட்பாவினம்.

10. இரண்டளவடியால் வருஞ்செய்யுள், வெண்செந் துறை என்று சொல்லப்படும்.

(உ-ம்) கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவோம் யாமே.

11. ஐந்து முதலிய பல சீர்களையுடையதாய் இரண்டடியாய் ஈற்றடி குறைந்துவருவதும், சிறந்த பொருளில்லாத வெண்செந்துறையும், வெண்டளை வழுவிய குறளும் குறட்டாழிசையெனப்படும்.

(உ-ம்) (1) கண்ணுவார்வினைகையகரடொறுகற்றவர்க்
கரசாயஞானநற்,
கண்ணிறுனடியேயடைவார்கள்கற்றவரே.

(2) அறுவர்க்கறுவரைப்பெற்றுங்கௌந்தி
மறுவறு பத்தினி போல்வயி னீரே.

(3) வண்டார்பூங்கோதை வரிவளைக்கைத் திருநுத
பண்டைய ளல்லள் படி. [லாள்.

12. மேற்கூறிய இரண்டும் இரண்டடியால் வருதலின்

வெண்பா இனம்.

மூன்றடியாய் வேற்றுத்தளை விரவி வெண்பாவே போல்
முடிவது வெண்டாழிசையாம்.

(உ-ம்) நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்

சிந்தியல் வெண்பா ஒருபொருண்மேல் மூன்றடுக்கி
வரினும் வெண்டாழிசையாம்.

13. (1) மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழாகிய அடி
கள் வரப்பெற்று அவற்றுள் பின்பிற் சிலவடிகள் சிலசீர்
குறைந்து வருவன வெண்டுறை எனப்படும்.

(உ-ம்) குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்த
ட்குலேமேற்பாய
அழலெரியின் மூழ்கினவாலந்தோவளிய வென்றயல்
வாழ்மந்தி
கலுழ்வன போனெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாடனீப்பனோ வல்லன்.

(2) அவை முன்பிற் சிலவடிகள் ஓரோசையாயும்
மற்றையவடிகள் வேறு ஓசையாயும்வரின் வேற்றொலி வெ
ண்டுறை எனப்படும்.

(உ-ம்) முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகு மே
வல் செய முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன்றாக் கரிய
வை வேல் பாடிக்
கலங்கிநின்றுரெலாங் கருதலா காவணம்
இலங்கு வாளிரண்டிரு விருகைவீ சிப்பெயர்ந்
தலங்கன் மாலே யவிழ்ந்தாட வாடுமிவள்
பொலங்கொள் பூந்தடங்கட்கேபுரிந்துநின் றரெ
விலங்கியுள் ளந்தப விளிந்து வே றுபவே. [லாம்

14. பெரும்பான்மை மூன்றும சிறுபான்மை நான்கு மாகிய அளவடிகள் வரப்பெற்று, அவற்றின்மேல் அடிதோறும் ஒருவிதச்சொல்லே தனிச்சொல்லாகவரின் வெளிவிருத்த மெனப்படும்.

(உ-ம்) கொண்டன் முழங்கினவாற்கோபம் பரந்தனவா—
லென் செய்கோயான்,
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவா—லென் செய்
கோயான்,
எண்டிசையுந் தோகை யிருந்தகவி யேங்கினவா—
லென் செய்கோயான்.

அடிதோறுந்தனிச்சொற்பெற்றுவருவதும் ஈற்றடி குறைந்து வருவதும் வெண்பாவின் தன்மையாதலின் இவை வெண்பாவிற்கினமாயின.

## ஆசிரியப்பா.

15. நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர வருதலின்றி, பெரும்பாலும இயற்சீருடையனவாய் தன்றளைதழுவியும் பிறதளை மயங்கியும் அளவடியால் வருவது ஆசிரியப்பாவாம்.

அது மூன்று அடிமுதல் ஆயிரமீறாகிய பல அடிகளால் வரும்.

இதற்கு ஓசை அகவலோசையாம. இது ஏ-ஓ-ஈ-ஆய்-என-ஐ-என்று முடிதல் சிறப்பு.

16. இது நேரிசையாசியரிப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டிலவாசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என

நான்கு வகையாம்.

17. அவற்றுள் ஈற்றயலடி ஒன்றும் சிந்தடியாய் வருவது நேரிசை ஆசிரியப்பாவாம்.

(உ-ம்) நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று,
நீரினு மாரள வின்றே சாரற்,
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு,
பெருந்தேனிழைக்கு நாடனொடு நட்பே.

18. முதலடியும் ஈற்றடியும் அளவடியாய் இடையிற் சில சிலவடிகள் குறளடியாயுஞ் சிந்தடியாயும் வரப்பெறும் ஆசிரியப்பா இணைக்குறள் ஆசிரியப்பா எனப்படும்.

(உ-ம்) நீரின்றண்மையுந்தீயின்வெம்மையும்
சாரச்சார்ந்து,
தீரத்தீரும்
சாரனாடன் கேண்மை
சாரச்சாரச்சார்ந்து
தீரத்தீரத்தீர் பொல்லாதே.

19. ஒத்த பலவடிகளால் வரும் ஆசிரியப்பா நிலைமண்டில ஆசிரியப்பா எனப்படும்.

(உ-ம்) வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரனாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

20. முதலிடை கடை அடிகளை மாற்றியுரைக்கினும், பொருளும் தன்மையும் கெடாத ஆசிரியப்பா அடிமறிமண்டில வாசிரியப்பாவாம்.

(உ-ம்) சூரல் பம்பிய சிறுகான்யாறே,
சூரரமகளிராரணங்கினரே,
வாரலெனினேயானஞ்சுவலே,
சாரனாட நீவரலாறே.

## ஆசிரியப்பாவினம.

21. தமமுளளவொத்த மூன்றடியால் வருவது ஆசிரியத்தாழிசையாம.

(உ-ம்) வானுறநிமிர்ந்தனை வையகமளந்தனை
பானமதிவிடுத்தனை பலவுயிரோமபினை
நீனிறவணணை நினனிறைகழறொழுதனம.

இது ஒருபொருணமேல மூனறடுககி வருவது சிறப்புடைத்து.

22. நான்கடியாய ஈற்றயலடிகுறைநதும, இடைமடககாயும, இடையடிகள குறைநதும, இடைமடககாயும வருவது ஆசிரியததுறையாம.

(உ-ம) கரைபொரு கானயாற்றங கல்லத ரெம்முள்ளி வருவி
ராயின
அரையிருள்யாமததடுபுலியேறஞ்சியகனறுபோக
நரையுருமேறுநுங கைவேல லஞ்சு நுமமை
வரை யரமஙகையா வெளவுத லஞ்சுதும் வாரலையோ.

23. அளவு ஒத்த கழிநெடிலடி நானகு வருவது ஆசிரிய விருத்தமாம்.

(உ-ம்) இரைக்குமஞ்சிறைப் பறவைகளெனப்
பெயரினவணடுபுடைசூழ
நுரைக்களென்னுமக்குழமபுகடிகழ்ந்தெழ
நுடங்கிய விலயததால
திரைககரஙகளிற் செழுமலைச்சந்தனசதிரள்

தரைக்குமற்றிது குணகடறறிரையொடு பொருத
லதவியாதே.

இஃது அறு சீரககழிநெடிலடியால் வநத ஆசிரியவிருத்தம்.

## கலிப்பா.

24. நேரீறறு இயற்சீரும, நிரைநடுவாகிய வஞசியுரிச் சீரும வருகலின்றிப் பெருமபாலும மூவசைசசீரும கலித தளையுமுடையனவாயச் சிறுபானமை ஏனைசசீரகளும வரப் பெற்று அளவடியால வரும பா **கலிப்பாவாம்.** இதற்கு ஓசை, துளளலோசையாம.

25. இவை தரவு, தாழிசை எனனும முதலுறுப்புககளையும, அராகம, அமபோதரஙகம, தனிசசொல, சுரிதகம எனனும துணையுறுப்புககளையும பெறறுவரும.

26. கலிபபாவின முதலில கலியோசையொடு மூன்றடி முதலாகப்பனனிரணடடிகாறும வரும உறுபபுத்தரவு எனனபபடும.

அமபோதரஙக வணணக ஒகதாழிசைககலிபபாக்களுககுத்தரவு ஆறடியே. பெருமை சிறுமையிலலை

27. தரவையடுதது அதனிற்சுருஙகி இரணடடி முதல் பதினோரடிகாறும, கலியிலககணததின வழுவாது வருவது தாழிசையாம.

28. முடுகிய ஓசையையுடையதாய வருவது முடுகியல அலலது அராகமாம.

இது நானகடி முதல எடடடிகாறும வரும. ஐஞசீரடியாயும, அறுசீரடியாயும, எழுசீரடியாயுமிருககும.

முடுகிய யோசையாவது ஒறறும நெடிலும விரவாது வருவது.

29. கரைசாரககரைசாரககுறைநது வரும அலையைப் போல அளவடியும, சிநதடியும, குறளடியுமாய வருவது அமபோதரஙகமாம. அது அளவடி ஈரடியாலிரணடும், ஓரடியால நானகும, முசசீரடி எட்டும், இருசீரடி பதினாறுமாகவும், குறைநதும வரும.

30. தனித்து வரும் சொல் தனிச்சொல்லாம்.

31. நீர்ச்சுழிபோலச் சுரிந்து முடிவது சுரிதகமாம். இது வெண்பாவாகவும் ஆசிரியமாகவும் மூன்றடிச் சிறுமையாய் ஆறடிப் பெருமையாய் வரும்.

32. தரவு ஒன்று, தாழிசை மூன்று, தனிச்சொல், சுரிதகம் என்று முறையே போந்து வருவது நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பாவாம்.

(உ-ம்) வாள்நெடுங்கண் பனிகூர வண்ணம்வேறாய்ப் பசந்திருந்து
தோள்நெடுந்தகை துறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூண்டெழுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வல்லபவோ.

இது தரவு.

சூருடைய கடுங்கடங்கள் சொல்லரியவென்பவால்
நீருடைய நலங்கொல்லப் பிரிவாரோ பெரியவரே.

சேறுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
மாறுடைய நலங்கொல்லப் பிரிவாரோ நல்லவரே.

சில பண்டோர் வெய்யான்றன் மெய்வெப்ப வார்
புலப்பண்டோர் நலங்கொல்லப் பொருளிலரே

இவை மூன்றும் தாழிசை

எனவாங்கு தனிச்சொல்.

அருளொன்றுமிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பனிநெடுங்காலமும் வாழிய
பொன்னெடுந் தேரோன் றாளையிற் பொலிகவே

இது சுரிதகம்.

இது நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா.

33. தரவு ஒன்று, தாழிசை மூன்று, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம், என்னும் உறுப்புக்களைப் பெற்று வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பாவாம்.

(உ-ம்) கெடலருமாமுனிவர் கிளைத்துடனிருந்தேத்தக
கடல்கெழுகனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழலவிர்சுழல்செங்கண்ணரி மாவாயமலர்த்தாளைத

தாரொடுமுடிபிதிர்த்த தமனியப்பொடிபொங்க
வார்புனலிழிகுருதி யகலிடமுடனனைப்பக்
கூருகிரானைமார்பிடந்த கோலமலிதடக்கையோய்.

இது தரவு

முரசதிர்வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித்திரடிண்டோட்போரபலைந்த மறமல்லர்
அடியொடுமுடியிறப்புண டயர்ந்தவர்நிலஞ்சேரப்
பொடியெழவெங்களத்துப்புடைத்தது நினபுகழாமோ.

கலியொலிவியனுலகங் கலந்துடனனிநடுங்க
வலியியலவிராழி மாறெதிர்ந்தமருட்சோரவு
யாணுதாருடம்போடு மறம்பிதிரவெதிர்கலங்கிச
சேணுயர்விசும்பிற செகுத்ததுநினசினமாமோ.

படுமணியிணநிரைகள் பரந்துடனிரிந்தோடக்
கடுமுரணெசினமலைந்த காரொலியெழிலேறு
வேரிசெறுபெருமபொசிய வீழ்ந்துதிரமவேருக
எறுமல்பெருந்தொழுவி னிறுத்ததுநினணிகலாமோ.

இவை மூன்றுந்தாழிசை.

இலங்கொளிமரகத மெழின்மிகுவியனகடல
வலம்புரித்தடக்கையி னாஅனினிறம.
விரியிணரகசோங்கமும வெந்தெரிபசும்பொனும
பொருகளிறடர்த்தோய புரையுநினனுடை.

இவை நாற்சீரடி யிரண்டம்போதரங்கம். இவை பேரெண.

கணகயாகதிர்முடி கனலுஞ்சென்னியை.
கணசுடருருபகை தவிர்த்தவாழியை

ஒலியியலுவணம் மோங்கியகொடியினை.
வலிமிகுசகடம் மாற்றியவடியினை

இவையோரடிநான்கம்போதரங்கம். இவை அளவெண்.

போரவுணர்க்கடந்தோய்நீஇ
புணர்மருதம்பிளந்தோய்நீஇ
நீரகலமளந்தோய்நீஇ
நிழறிகழைம்படையோய்நீஇ

இவைமுச்சீரடிநான்கம்போதரங்கம். இவை யிடையெண்.

ஊழிநீஇ, உலகுநீஇ, உருவுநீஇ, அருவுநீஇ, ஆழிநீஇ,
அருளுநீஇ, அறமுநீஇ, மறமுநீஇ.

இவை யிருசீரோரடி எட்டம்போதரங்கம். இவை சிற்றெண்.

எனவாங்கு, தனிச்சொல்.

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்

கயலொடுகலந்த சிலையுடைக்கொடுவரிப்
புயலுறழ்தடக்கைப் போர்வேலசுதன்

றொன்று முதிர்கட லுலக முழுதுடன்
ஒன்றுபுரிதிகிரி யுருட்டுவோனெனவே.

இது சுரிதகம், இஃதெட்டுமடிதிஞறுமென்று சொல்லப் பட்ட முச்சீரடியும், இருசீரடியும, நான்கு மெட்டுமாய வகத அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.

34. தரவு ஒன்று, தாழிசை மூன்று, அராகம், அம்போதரங்கம, தனிச்சொல், சுரிதகம, என்னுமாறுறுப்புக் களையும பெற்று வருவது வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பாவாம் (உ-ம்)

விளங்குமணிப்பசும்பொனனின் விசித்தமைத்துக்கதிர்கான்று
துளங்குமணிக்கனைகழற்காற்றுறு மலர்நறும்பைந்தாரப்

பருஉத்தடக்கைமதயானைப் பணையெருத்தின்மிசைத்தோன்றும்
குருஉக்கொண்டமணிப்பூணோய் குறையிரந்துமுன்னுட்கண்

மாயாதவனப்பிளையாய் மகிழ்வார்க்குமெல்லார்க்குர்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறையூரகேள்.

இது தரவு

காட்சியாற்கலப்பெய்தி யெத்திறத்துங்கதிர்ப்பாகி
மாட்சியார்க்கறியாத மறபொத்தாய்கரவினுற்
பிணிநலம்பெரிதெய்திப் பெருந்தடந்தோள்வனப்பழிய
அணிநலந்தனியேவந் தருளுவதுமருளாமோ.

அன்பினலமிழ்தளைஇ யறிவினற்பிறிதின்றிப்
பொன்புனைபூணகம் பசப்பெய்தப்பொழிலிடத்துப்

பெருவரைத்தோளருளுதற்கிருளிடைத்தமியையாடச
கருவரைச்சோளகதிரபபிகருங் காசலுஙகாதலோ
பாஙகனையேவாயிலாப பலகாலுடயவந்தொழுகுங
கோஙகாசகரவிணையுந கொள் ாசவிருளிடை ககட
கு் வரையேய ச்சோளிணைகள குளிாபபியபாணரமிடையா
டபலா ாாரருளுங்கினருசியுா குசியோா [யச

இவை முனாறா சாழசை

தா நறுமுறிசெறி லரிடையிடை சபுலெண விரியணபொதில.
போ நறுநறுவிரைாபுந லாொ ரி ரு சருரெ லவி ி யனசழ/.
கி நாறுகிா றுசெண்ணிமு ி ண நு ொ ாரிபிணை வண்நுறை [ல
மு நறு ொ ா ா நா ா ா ா ொ ா நழொ ாட்டிப்படைட நசா

இவை நானகு அாா

[illegible]

35 [illegible]

[illegible]

[illegible]

36 [illegible] ஒரு
பொருா நு பியமைரியா ாபி ல அடிகளையுடை
யாச சிந ா ா ய ப்பெருந மிெெவணபாவாய. அடி
ப்பு வா தளவிலே பொருள புப வயாய

இா த ா ா ரயை உலா, நாநு முநவிய பிரபநயஙக
ளிற் காணா

37. நானகடியாலாகிய சரவு ஒனறு தனியேயாவது
தனிச்சொலலும சுரிதகமும பெறறுவதுவரின அது சரவு
கொச்சககககலிப்பாவாம.

(உ-ம்) செல்வப்போர்க்க தக்கண்ணன் செயிர்த்தெழுந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூவிடைநுழையு மதியம்போல்
மல்லலோங்கெழில்யானை மருமம் பாய்ந்தொளித்ததே.

இது தனிச்சொல்லும் சுரிதகமும் இன்றி வந்த தரவுக் கொச்சகக்கலிப்பாவாம்.

38. சுரிதகம் பெற்றாவது பெறாமலாவது இரண்டு தரவு வரின் தரவிணைக்கொச்சகக்கலிப்பா.

39. சில தாழிசைகளோடு வருவது சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவாம்.

40. பலதாழிசைகளால் வருவது பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவாம்.

41. கலிப்பாவின் உறுப்புக்கள் ஆறும் ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குச்சொல்லிய முறையின் மாறியும் மிகுந்தும் பிறவாற்றான் வேறுபட்டும் வரின் மயங்கிசைக்கொச்சகக் கலிப்பாவாம்.

இவற்றிற்கு உதாரணம் கலித்தொகை முதலியவற்றிற் கண்டுகொள்க.

42. இரண்டடியும் பலஅடியுமவந்து ஈற்றடி மிக்கு அல்லாத அடிகள் தம்முள் அளவொத்தும் ஒவ்வாதும் வருவது கலித்தாழிசையாம்.

இஃது ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வருவது சிறப்புடைத்து. தனியேயும் வரும்.

(உ-ம்) கொய்தினைகாத்துங் குளவியடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடில் வாரனீயைய நலம் வேண்டின்.

இஃது இரண்டடியாய் ஈற்றடிமிக்குவந்த கலித்தாழிசை.

பூண்ட பறையறையப்பூதமருள
நீண்ட சடையானாடுமே
நீண்ட சடையானாடுமென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே.

இஃது ஈற்றடிமிக்கு ஏனையடி ஒவ்வாதுவந்த கலித்தாழிசை.

43. ஐஞ்சீரடி நான்கால் வருவது கலித்துறையாம்.

(உ-ம்) பாவமு நின்ற பெரும்பழி யும்பகை நண்போடு
மேவமு மென்பன மண்ணுல காள்ப ரொண்ணுரோ
வாவது போக வென் றுருயிர்த் தோழமை தந்தான்மேற்
போவது சேனையு மாருயி ருங் கொடு போயன்றோ

இது கலிநிலைத் துறையென்றும் காப்பியக் கலித்துறை யென்றும் பெயர் பெறும்.

44. முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாது கடையொருசீரும் விளங்காயாகி வருவது கட்டளைக்கலித்துறையாம்.

(உ-ம்) தெய்வசி காமணி யேமணி கூடலிற் சென்றுவிற்ற
மெய்வசி காமணி கண்டா பழமலை வித்தகமீ
னெய்வசி காமணி மாவெனுங் கன்னியை நெஞ்சகத்து
வைவசி காமணி ஞேவா தெனையின்ப வாழ்வளித்தே.

45. அளவடி நான்கால் வருவது கலிவிருத்தமாம். இதில் இயற்சீர் மிகுந்து வரும்.

(உ-ம்) எலியெலா மிப்படை யரவம் யானென
வொலியுலாஞ் சேனையை யுவந்து கூயினன்
வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழிப் புகுந்தபோலவே.

இவை கொச்சகக்கலிப்பாவிற் சிறிது வேறுபட்டு வருதலிற் கலிப்பாவுக்கினமாயின.

## வஞ்சிப்பா.

46. வஞ்சிச்சீரும், வஞ்சித்தளையும் சிறுபான்மை பிற சீர்களும் தளையும் வரப்பெற்று மூன்றடிச்சிறுமையாய் ஆயிரமடிப் பெருமையாய்த் தனிச்சொல்லும் ஆசிரியச்சுரிதகமும் பெற்றுவருவன வஞ்சிப்பாவாம். இச்சுரிதகம் இரண்டடியாலும் வரும். இதற்கு ஓசை தூங்கலோசையாம.

47. இது குறளடிவஞ்சிபபாவும, சிநதடிவஞசிப்பாவும என இருவகைபபடும.

(உ-ம) சுறமறிவன துறையெல்லாம
இறவீனபன வில்லெல்லாம
மீனறிரிவன கிடங்கெல்லாம
தேனருழவன பொழிலெலலாம,

எனவாஙகு,

மணகெழு நெடுமதின மனன னூரே

' குறளடி வஞசிப்பா.

'பபா வநத விடததிறகாணக.

.48. குறளடி நானகால வருவது வஞசிததுறையாம.

(உ-ம) மை சிறநதன மணிவரை
கை சிறந்தன காந்தளும
பொய சிறநதனா காதலா
மெய சிறநதிலா விளஙகிழாய.

49. இவவஞசிததுறை ஒரு பொருணமேல மூனறடுககிவரின வஞசிததாழிசை யெனபபடும. உதாரணம வநத

50. சிநதடி நானகு வருவது வஞசிவிருததமாம.

(உ-ம) சோலை யாாநத சுரததிடைக
காலை யாாகழ லாாப்பவும
மாலை மாாபன வருமாயின
நீல வுணகணிவள் வாழுமே.

குறளடி சிநதடியால வருவது வஞ்சிப்பாவாதலின இவை யதறகு இனமாயின.

## மருட்பா.

51. வெணபா முனனுகத தனிசசொறபெறறு ஆசிரியப்பாவோடு சோநதுவரின் அது மருட்பாவெனப்பெயா பெறும்.

வெண்பாவடியும் ஆசிரியவடியும் அளவில் ஒத்துவரின் சமநிலைமருட்பாவென்றும் ஒவ்வாதன வியநிலை மருட்பா வென்றும் வழங்கப்படும்.

52. அது கைக்கிளை, புறநிலைவாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என்னும் பொருள்களில் வரும்.

53. கைக்கிளையில் வருங்கால் ஆசிரியவடி இரண்டாய் ஈற்றயலடி சிந்தடியாய் வருமெனக்கொள்க.

(உ-ம்) திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும்—அரிபரந்த
சேயித ழுண்கணு மிமைக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே,

54. கைக்கிளையாவது—ஒருதலைக்காமம். இது பிற பாக்களிலும் வரும்.

55. புறநிலைவாழ்த்தாவது—நீ வழிபடுந்தெய்வம நின்னைப்புறங்காப்ப நீ வழிவழி மிகுவதாகவெனச்சொல்வதாம்.

56. வாயுறை வாழ்த்தாவது—பின்னை பலிக்கும் எங்கள் வார்த்தை என்று சொல்லி மேம்பட்ட சொல்லைச்சொல்வதாம்.

57. செவியறிவுறூஉவாவது—நீதியுடைய அரசர்க்கு நன்மதி கூறுதலாம்.

ஆறுறுப்பு மைம்பாவு மூன்றினமுஞ் சான்றோர்கள்
கூறிய வாறுய்ந்து கொளல்.

முற்றிற்று.